**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 166 /2022 PW2**

10.06.2025 **வா.சா.2 ராமகிருஷ்ணன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

என்னை இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கக்கோரி பாக்கியலட்சுமி தான் அழைத்தார். என்னுடைய மகள் தான் பாக்கியலட்சுமி என்றால் சரிதான். நீலகவுண்டருக்கு வழக்கு சொத்து எவ்வாறு வந்தது என தெரியுமா என்றால் தெரியும். செட்டில்மெண்ட் எழுதுவதற்கு என்னை பாக்கியலட்சுமி தான் அழைத்துச் சென்றார் என்றால் சரியல்ல. நீலகவுண்டருக்கு எழுத படிக்க தெரியாது என்றால் கையொழுத்து மட்டும் போடுவார், படிக்கத் தெரியாது. நீலகவுண்டர் அவருடைய கையொப்பத்தை கோலம் போடுவது போல் போடுவாரா என்றால் கையொப்பம் போடுவார். தான செட்டில்மெண்ட் எழுதிய காலகட்டத்தில் நீலகவுண்டருக்கு வயது சுமார் 65 இருக்கும். பத்திரத்தில் சொத்து விவரம் எதனை பார்த்து எழுதப்பட்டது என்றால் பழைய பத்திரத்தை பார்த்து எழுதப்பட்டது. சொத்தின் நீல அகலம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நீலகவுண்டருக்கு 3 ஆண் பிள்ளைகள் என்றால் சரிதான். 3 பேருக்குமே பேர பிள்ளைகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நீலகவுண்டருக்கு 3 மகன்கள் மற்றும் பேரபிள்ளைகள் இருக்கும் போது ஒரே மகனின் பிள்ளைகளுக்கு சொத்து எழுதி வைக்க வேண்டிய அவசியம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நீலகவுண்டரின் மூத்த மகன் பெயர் ரங்கநாதன். ரங்கநாதனுக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். ரங்கநாதனின் 2வது மனைவியின் தந்தை தான் நான் என்றால் சரிதான். நீலகவுண்டர் அவரது 3 மகன்களையும் சரிசமமாகத்தான் நடத்தினார் என்றால் சரிதான். சரிசமமாக தனது பிள்ளைகளை பார்த்த நீலகவுண்டர் தனது ஒரே மகனின் பிள்ளைகளுக்கு சொத்தை எழுதி வைக்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் பாக்கியலட்சுமியின் அப்பா என்பதால் நானும், பாக்கியலட்சுமியும் சேர்ந்து தான செட்டில்மெண்ட் பத்திரத்தை தயார் செய்தோம் என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட்டில் கண்டுள்ள கையொப்பம் நீலகவுண்டரின் கையொப்பமே இல்லை என்றால் சரியல்ல. நீலகவுண்டரின் புகைப்படத்தையும், அவரது கையொப்பத்தையும் நன்றாக தெரிந்து கொண்ட நான் இந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை பொய்யாக தயார் செய்தேன் என்றால் சரியல்ல. 22.10.2007 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் அமுலுக்கு வரவில்லை என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் பத்திரப்படி ரங்கநாதன் பிள்ளைகள் அவர்களது பெயருக்கு பட்டாவை மாற்றிக்கொள்ளவேயில்லை என்றால் சரியல்ல. ரங்கநாதனின்

பிள்ளைகள் பெயரில் உள்ள பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் மூத்த மகன் பூவையாவின் பெயரில் பட்டா இருப்பதை நான் பார்த்துள்ளேன். மேற்படி பட்டாவை ரங்கநாதன் வைத்துள்ளார். நான் சொல்வது போல் எந்த பட்டாவும் இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 22.10.2007 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரமே செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி நீலகவுண்டர் 3, 4 பிரதிவாதிகள் பெயருக்கு 03.01.2008ல் வழக்கு சொத்தைப் பொருத்து தான செட்டில்மெண்ட் ஒன்றை எழுதி அவர்களிடம் சொத்தை சுவாதீனம் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. நான் என் மருமகன் மற்றும் மகளுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.